# Chairman's Speech

## 39TH ANNUAL GENERAL MEETING

**19th September 2019 at 10.15 a.m.**
**at MUSIC ACADEMY,**
**No. 168, T.T.K. Road, Chennai - 600 014.**

TNPL

**TAMIL NADU NEWSPRINT AND PAPERS LIMITED**
Regd. Office : 67, Mount Road, Guindy, Chennai - 600 032.



Thiru. **N. MURUGANANDAM**, IAS,

Chairman

## LADIES AND GENTLEMEN, VANAKKAM.

I extend my warm welcome to all of you to this 39th Annual General Meeting of your Company. The Directors Report and the Audited Accounts for the year ended 31st March 2019 have been with you for some time and with your permission, I shall take them as read.

Paper industry plays a significant role in the Indian Economy. Your Company commenced newsprint and printing and writing paper production in the year 1984 with a capacity of 90,000 tonnes per annum. Since then, your Company has grown steadily and enhanced the capacity to 6,00,000 MT consisting of 4,00,000 MT of printing and writing paper and 2,00,000 MT of Multilayer Packaging Board with adequate in-house facilities for pulp, power and filler materials.

With the consistent growth, your Company has emerged as the third largest producer in the Indian Paper Industry. Over the years, your Company has built a good reputation among all its stakeholders.

## OPERATIONAL AND FINANCIAL PERFORMANCE:

During the year, your Company has produced 4,32,572 MT paper and achieved paper sales of 4,45,389 MT. With the commissioning of Multilayer Double Coated Board Plant, your Company has made a foray into the Packaging Board segment. Now your Company has produced 1,76,997 MT packaging paper board and achieved packaging paper board sales of 1,77,047 MT.

During the year, your Company has exported 84,027 MT of printing and writing paper to 36 countries valued at Rs.537.08 Crore and Packaging board was 2385 MT valued at Rs. 13.78 Crore.

The overall results are satisfactory as the company has to contend with severe raw materials shortages, steep escalation in costs. These results were driven by higher sales volume, higher sales realisations as well as record production levels and improved efficiency across all areas of operation.

Due to demand for Printing & Writing Paper throughout the year ended March 2019 and despite increase in input costs in procurement of bagasse and other raw materials, the Company has earned a PBT of Rs 155.20 Crores. This performance in adverse environment is a commendable achievement by the Management.

Market Capitalization as on 31.03.2019 was Rs. 1425.74 crore.

Despite huge requirement of funds for capital expenditure and repayment of loans, the Board of Directors of your company have recommended payment of dividend at Rs.7.50 per share i.e. 75% against 50% in the previous year.

As part of Solid wastes management, your Company has set up a 900 tpd capacity Cement plant for producing high grade cement from solid wastes-lime sludge and fly ash. During the year, your Company has produced 2,33,876 MT of cement.

65.23 lakh cubic meters of methane gas generated in the Bio-methanation plant during the year was consumed in lime kilns saving consumption of 3848 kl of furnace oil and 105 MT of imported coal.

Your Company was the First Company in the Indian Paper Industry to have availed the Renewable Energy Certificates (RECs) for generating green power from the steam produced in the Recovery Boiler using black liquor. Since 01.04.2016, the eligibility criterion for RECs has been restricted to the facilities set up between 29.09.2010 and 31.03.2016. As your Company had setup the recovery boiler prior to the cutoff date, it has become ineligible to avail this facility from 01.04.2016. Your Company has generated revenue of Rs 76.77 Crore in the last 6 years through sale of RECs.

During the year, your company has reduced overall debt (Term Loan and Working Capital) to an extent of Rs. 466.94 crore.

## AWARDS AND RECOGNITION:

1. TNPL bagged the Most Innovative Project award for Environmental Best Practices Award 2018 conducted by CII - Sohrabji Godrej Green Business Centre, Hyderabad during June18 at Chennai.

2. TNPL bagged first place during 15th National Award for Excellence in Cost Management 2017 Good Performance Award under the category MANUF ACTURING - PUBLIC Organization - from the Institute of Cost Accountants of India. during October 2018 at New Delhi.

3. TNPL received the IEI Industry Excellence Award 2018, from Institution of Engineers India (IEI, Kolkata). This award has been instituted to recognize industry leaders for their innovation, excellence in engineering and operation & services, their capacity to sustain excellence in a competitive manner.

4. TNPL have been awarded as Special Commendation for prestigious Golden Peacock National Quality Award for the year 2018-19, by the Institute of Directors (IOD), India. The award was presented to TNPL at a convention conducted by IOD at Dubai during March 2019.

## CURRENT STATUS OF PAPER INDUSTRY:

Broadly, the industry is classified into four main segments- namely, writing and printing papers, Industrial packaging paper, speciality paper and newsprint. India holds 15th rank among paper producing countries in the world with a total installed capacity of 16 million tonnes. The demand is estimated at 17 million tonnes. The per capita consumption is around 13 kgs against the Asian average of 26 kgs and World average of 58 kgs. India is considered as the fastest growing market for paper in the world with an average annual growth of 6%. The domestic consumption is expected to rise to 25 million tonnes by 2019-20.

The market for Packaging Board is the fastest growing segment in the industry. Grey-Back Board account for 45%, White-back and other high end varieties (FBB, SBS, Cup Stock.) account for the remaining 55%. The demand growth for packaging boards is estimated at 10-12% per annum.

Continuous year-on-year increase in zero duty imports of paper and packaging board under Free Trade Agreements, shortage of raw materials, rise in pulpwood prices, poor wastepaper collection mechanism are some of the major areas of concern faced by the paper industry on a continuous basis.

Indian paper industry has to manage the above challenges through rising pulpwood plantation, increasing wastepaper collection mechanism and implementing effective and efficient cost control measures to compete with the imports under zero duty.

## FUTURE OUTLOOK :

Indian Paper Industry is highly fragmented with over 750 paper mills of varying sizes spread across the Country. Only 50 mills are of a capacity of 50,000 tpa or more. The overall capacity utilization is estimated at 80-90%.

In the case of Printing and Writing Paper, the domestic paper sector is likely to see marginal improvement in demand from education and corporate sectors, aided by expected higher GDP growth of the country. The per capita paper consumption is estimated at 13.0 kg. The demand that picked up during 2018-19 appears to continue. Major reasons are, increase in Literacy Rate and increasing enrolment in education which could lead to higher demand of paper in India. When globally, paper consumption has witnessed negative / stagnant growth, in India the past few years has been very strong. With increasing income levels and urbanization per capita paper consumption in the country will gradually improve resulting in higher demand mainly

in consumer paper grades like Writing and Printing with various end-applications like text book publishing, Student Notebooks, cut-size paper for photo copier and inkjet printers.

In the case of Packaging Boards, increasing trend in the e-commerce space will usher higher packaging boards for delivery purpose. Also, due to ban on one time use plastic bags, food delivery applications have started using packaging paper boards for delivery purpose which could lead to higher demand of these grades. With the consistent economic growth, demand for packaging paper will show improvement in the coming months.

As part of the growth plan, your Company has embarked on a Mill Expansion Plan (MEP) in Unit II for producing 1,65,000 MT of paper per annum by way of installing a state-of- the art Paper Machine a 400 tpd chemical hardwood pulp mill with chemical recovery boiler, augmentation of Captive power plant and Waste water treatment plant and other auxiliaries at a total capital outlay of Rs.2,520 crores.

With the implementation of the expansion plan, the overall paper and packaging board production capacity in Unit I and Unit II of your company will be increased to 7,65,000 MT per annum from the current capacity of 6,00,000 MT per annum along with pulping facilities.

## ENVIRONMENT PROTECTION:

As you are aware your company is one among the 35 of the worlds most important pulp and paper manufacturers participated in WWF Environmental Paper Company Index (EPIC) 2017.

TNPL treats environment improvement as a priority area. Continuous studies are undertaken to reduce water consumption with improvement in the quality of effluent. Compliance to pollution control norms and CREP regulations are strictly adhered to.

Further your company is committed to design, manufacture and supply of quality products by adopting contemporary technologies for overall efficiency, in a clean environment.

During the year, your Company has consumed 7,37,978 MT of depithed bagasse for manufacture of paper and avoided consumption of 6.1 lakh MT of pulp wood. The company has produced 94,166 MT of Deinked pulp using waste paper as raw material thereby conserved about 4.1 lakh MT of wood in the year 2018-19.

53,403 MT of lime sludge utilized for cement production has resulted in conservation of 61,132 MT of lime stone.

With the implementation of various water conservation measures, overall water consumption has been reduced from 40 KL per ton to about 32 KL per ton of paper which is one of the lowest figure in the Integrated Pulp and Paper industry in the National Level. Continuous efforts are taken to reduce the water consumption to maximum possible extent at all stages.

Further as part of rain water harvesting, the Company has engaged the services of Anna University to identify potential areas and accordingly constructed three Rain water Collection Pits each

about 5000 sq meters surface area in its housing colony premises and one reservoir with surface area of about 30,000 sq meters within the mill premises.

Your Company has generated 435 lakh units of Green Power during the year through its two wind farms.

Your Company has set up a Clonal Propagation & Research Centre (CPRC) in the factory through which 40 million seedlings and clones have been produced and dispatched to the fields.

TNPL has paved the way to reap maximum benefit out of the barren lands while promoting green cover and uplifting the lives of farmers by introduction of two plantation schemes in the year 2004, namely the Farm Forestry Scheme and Captive Plantation Scheme which are economically viable , socially compatible and people centric. Till date, your Company has implemented over 1,46,436 acres of which 15,875 acres are under the Captive Plantation Scheme and 1,30,561 acres are under the Farm Forestry scheme involving 27,596 farmers.

## CORPORATE SOCIAL RESPONSIBILITY:

Your Company is committed to being a socially responsible corporate citizen. During the year, your Company has implemented several community development measures towards Promoting Education, Health Care, Social development, Livelihood and Economic improvement, Environment & Sanitation, Culture & Heritage and Soil & Water conservation.

Your Company has spent Rs. 4.05 Crore for CSR activities during 2018-19 by mainly focusing to enhance the socio economic status by conducting skill development programme, providing note books, providing drinking water facilities etc.

## ACKNOWLEDGEMENT:

I take this opportunity to place on record my sincere thanks to the Central and State Governments and the Banks/Financial Institutions for their valuable support and assistance.

I am extremely grateful to my colleagues on the Board for their valuable advice and support.

I also wish to place on record my sincere appreciation for the efforts put in by all employees of the Company.

My whole-hearted thanks to all Shareholders and other Stakeholders for continued encouragement and support.

I thank you for having attended this Annual General Meeting, sparing your precious time.

******************

# நிறுவனத் தலைவர் உரை

# 39வது ஆண்டு பொதுக்குழு கூட்டம்

19ஆம் நாள் செப்டம்பர் 2019, காலை 10.15 மணி
இடம் : **மியூசிக் அகாடெமி**
எண். 168, டி.டி.கே. சாலை, சென்னை-14.

**தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்**
பதிவு அலுவலகம் : 67, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032.



திரு. N. **முருகானந்தம்** இ.ஆ.ப.

தலைவர்

## பெருமதிப்பிற்குரிய பங்குதாரர்களே, வணக்கம் !

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் **39**வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் தங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மார்ச் **31, 2019** உடன் முடிவடைந்த ஆண்டுக்கான இயக்குனர்களின் அறிக்கையும் தணிக்கை செய்யப்பெற்ற நிதிநிலை அறிக்கையும், தங்களிடம் இருப்பதால், தங்கள் அனைவரின் அனுமதியுடன் அவற்றை இங்கு வாசிக்கப்பட்டதாகக் கொள்கிறேன்.

இந்திய பொருளாதாரத்தில் காகிதத் தொழில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. உங்கள் நிறுவனம் வருடத்திற்கு **90,000** டன் உற்பத்தி திறனுடன் செய்தித்தாள், அச்சு மற்றும் எழுதும் காகித உற்பத்தியை **1984**–ஆம் ஆண்டு தொடங்கியது. அன்றிலிருந்து உங்கள் நிறுவனம் தொடர்ந்து சீரான வளர்ச்சி பெற்று இன்று ஆண்டுக்கு **6,00,000** மெ.டன் உற்பத்தித் திறனுடன் இயங்கி வருகிறது. இதில் **4,00,000** மெ.டன் அச்சு மற்றும் எழுதுத்தாள்கள் மற்றும் **2,00,000** மெ.டன் அடுக்கு காகித அட்டை செய்யும் தொழிற்சாலையும், மேலும் தேவையான மரக்கூழ், எரிசக்தி மற்றும் நிரப்புப் பொருள்களையும் ஆலையினுள்ளேயே உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளது.

இந்த சீரான வளர்ச்சியின் மூலம், உங்கள் நிறுவனம் நாட்டிலேயே மூன்றாவது மிகப் பெரிய காகித ஆலையாக இடம் பெற்றுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக, உங்கள் நிறுவனம் தனது அனைத்து தர பங்குதாரர்களிடையேயும் நற்பெயரை ஈட்டியுள்ளது.

## இயக்குதல் மற்றும் நிதிநிலை செயல்பாடுகள் :

இந்த ஆண்டு உங்கள் நிறுவனம் **4,32,572** மெ.டன் அச்சு மற்றும் எழுது காகிதத்தை உற்பத்தி செய்துள்ளது. காகித விற்பனை **4,45,389** மெ.டன் என்ற அளவை எட்டியுள்ளது. அடுக்கு இரட்டைப் பூச்சு காகித அட்டை ஆலையை நிறுவியதன் மூலம் உங்கள் நிறுவனம் காகித அட்டை உற்பத்தி பிரிவில் ஒரு முன்னோடியாக உள்ளது. இந்த ஆண்டு உங்கள்

நிறுவனம் 1,76,997 மெ.டன் காகித அட்டையை உற்பத்தி செய்ததுடன் 1,77,047 மெ.டன் காகித அட்டையை விற்பனையும் செய்துள்ளது.

இந்த ஆண்டு உங்கள் நிறுவனம் 84,027 மெ.டன் அளவுள்ள அச்சு மற்றும் எழுது காகிதத்தை, சுமார் ரூ. 537.08 கோடி மதிப்புக்கு 36 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. மேலும் சுமார் ரூ. 13.78 கோடி மதிப்புள்ள 2385 மெ.டன் அளவுக்கு காகித அட்டையை ஏற்றுமதி செய்துள்ளது.

உங்களது நிறுவனம் கடுமையான மூலப் பொருட்கள் பற்றாக்குறை மற்றும் தொடர்ந்து உயர்ந்து வந்த செலவுகள் இருந்த போதிலும், உங்கள் நிறுவனத்தின் மொத்தமான பலன்கள் திருப்திகரமாக இருந்தன. முன்னெப்போதும் இல்லாத அதிகப்படியான உற்பத்தி அளவுகளும், இயங்கு முறைகளின் அனைத்து பகுதிகளிலும் முன்னேற்றமடைந்த செயல்திறன், அதிகப் படியான விற்பனையும் அதிகப்படியான விற்பனை மீள்திறனும் இந்த திருப்திகரமான முடிவுகளுக்கு வழிகோலின.

அச்சு மற்றும் எழுது காகிதத்தின் அதிகமான தேவை ஆண்டு முழுவதும் இருந்த காரணத்தால், கரும்புச் சக்கை மற்றும் பிற மூல பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து இருந்த போதிலும், கடந்த மார்ச் 2019–ல் முடிவடைந்த நிதி ஆண்டில், உங்களது நிறுவனம் ரூ.155.20 கோடியை, வரிக்கு முந்தைய இலாபமாக பெற்றுள்ளது. இத்தகைய ஓர் எதிர்மறையான சூழலிலும் இந்த செயல்திறனானது, இந்த நிர்வாகத்தின் பாராட்டத்தக்க ஒரு சாதனையாகும்.

கடந்த 31–03–2019 அன்று நமது நிறுவனத்தின் சந்தை மூலதனம் ரூ. 1425.74 கோடியாகும்.

மூலதன செலவுகளுக்காகவும், கடனைத் திருப்பி செலுத்துவதற்காகவும், பெருமளவு நிதி தேவைப்பட்ட போதிலும், நமது நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு பங்குதாரர்களுக்கு கடந்தாண்டு வழங்கிய (50%) ஈவுத் தொகையைவிட அதிகமாக ரூ. 7.50 (75%) ஈவுத் தொகையாக வழங்க முடிவு செய்துள்ளது.

திடக்கழிவுப் பொருட்கள் மேலாண்மையின் ஒரு பகுதியாக உங்கள் நிறுவனம் திடக் கழிவாகிய சுண்ணாம்பு சேறு மற்றும் எரி சாம்பலைக் கொண்டு உயர்தர சிமெண்ட் தயாரிக்கும் நாள் ஒன்றுக்கு **900** டன் உற்பத்தி திறன் கொண்ட சிமெண்ட் ஆலையை நிறுவியது. இந்த ஆண்டு உங்களது இந்த நிறுவனம் **2,33,876** மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்துள்ளது.

இந்த ஆண்டு உங்கள் நிறுவனம் **65.23** லட்சம் கன மீட்டர் அளவுள்ள மீத்தேன் வாயுவை உற்பத்தி செய்துள்ளது. இந்த வாயுவை ஆலையின் சுண்ணாம்பு சூளையில் பயன்படுத்தியதன் மூலம் **3848** கிலோ லிட்டர் உலை எண்ணெய் மற்றும் **105** மெ.டன் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி சேமிக்கப்பட்டுள்ளது.

இந்திய காகித ஆலைகளில், மீட்பு கொதிகலனில் உற்பத்தியாகும் நீராவியிலிருந்து, பசுமை எரிசக்தியை உற்பத்தி செய்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சான்றிதழ்களைப் பெற்ற முதல் நிறுவனம் உங்கள் நிறுவனமாகும். **1.4.2016** முதல், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி சான்றிதழ், **29.09.2010** லிருந்து **31.03.2016** வரை அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று திருத்தம் செய்யப்பட்டது. உங்கள் நிறுவனம் மீட்பு கொதிகலனை **29.09.2010**க்கு முன்னதாக நிறுவியதனால் **01.04.2016**லிருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சான்றிதழ்களை பெறுவதற்கான தகுதியினை இழந்தது. கடந்த **6** ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சான்றிதழ்கள் மூலம் கிடைத்த வருமானம் ரூ. **76.77** கோடிகளாகும்.

இந்த ஆண்டு உங்கள் நிறுவனம், மொத்த கடன் அளவை (பருவ கால கடன் மற்றும் தொழில் மூலதனம்) ரூ. **466.94** கோடி குறைத்துள்ளது.

## விருதுகள் மற்றும் அங்கீகாரம் :

1) உங்கள் நிறுவனத்திற்கு "CII சுற்றுச்சூழல் சிறந்த நடவடிக்கை விருது 2018" வகையின் கீழ் "மிகவும் புதுமையான சுற்றுச் சூழல் விருது" CII சொராப்ஜி கோத்ரேஜ் பசுமை வணிக மையம், ஐதராபாத், கடந்த 2018–ஆம் ஆண்டு ஜுன் மாதம் சென்னையில் வழங்கியது.

2) உங்களது நிறுவனம், "15–வது தேசிய சிறப்பான செலவு மேலாண்மை 2017 – சிறந்த செயல்திறன்" விருதினை, "உற்பத்தி– பொதுத் துறை நிறுவனங்கள்" என்ற பிரிவினில் முதல் பரிசினை "விலைமதிப்பீட்டு கணக்கர்" நிறுவனத்திடமிருந்து, கடந்த அக்டோபர் மாதம் 2018–ல், புதுடெல்லியில் பெற்றது.

3) உங்கள் நிறுவனம், "இந்திய பொறியாளர் நிறுவனத்தின்", "சிறந்த ஆலை மேம்பாடு திறன் விருது 2018" என்ற விருதினை பெற்றுள்ளது. இந்த விருதானது, தொழிலில் சிறந்து விளங்கும் நிறுவனங்களுக்கு, அவர்களது புதுமை படைக்கும் திறன், இயக்குதல் மற்றும் சேவைகளில் பொறியியல் திறன், கடுமையான போட்டிகளுக்குக்கிடையிலும் தளராத உறுதியுடன் நீடிக்கும் திறனை, அங்கீகரிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.

4) உங்களது நிறுவனம், மதிப்பு மிக்க, "தங்க மயில் தேசிய தரத்திற்கான விருதினை" 2018–19– ஆண்டிற்காக பெற்றுள்ளது. இந்த விருது, இந்திய இயக்குனர்கள் நிறுவனம் வழங்கியது. இந்த விருது கடந்த மார்ச் மாதம் 2019, துபாயில் நடைபெற்ற சிறப்பு மிகுந்த ஒரு விழாவினில் வழங்கப்பெற்றது.

## காகிதத் தொழில் துறை, தற்போதைய நிலை :

பொதுவாக, இந்த காகித தொழில்துறை, நான்கு முக்கியமான பிரிவுகளை உள்ளடக்கியது. அவையாவன, எழுது மற்றும் அச்சுகாகிதம், தொழிற்சாலைகள் பயன்படுத்தும் பொதிகட்டும் காகிதம், சிறப்பு உபயோகத்திற்கான காகிதம் மற்றும் செய்தித்தாள் காகிதம் ஆகும். இந்தியா, 16 மில்லியன் டன் என்ற நிறுவப்பட்ட உற்பத்தி

திறனுடன் உலகில் 15–வது இடத்தில் உள்ளது. தேவையோ 17 மில்லியன் டன் என மதிப்பிடப்பட்டு உள்ளது. இந்தியாவில் சராசரி நுகர்வு என்பது, நபர் ஒருவருக்கு 13 கிலோ என்ற அளவிலேயே உள்ளது. ஆனால் ஆசிய கண்டத்தின் சராசரி நுகர்வு 26 கிலோவாகவும், உலக சராசரி 58 கிலோவாகவும் உள்ளது. இந்தியா காகித சந்தையில் வேகமாக வளர்ந்து வரும் நாடாகவும், காகிதத்தின் மொத்தத் தேவை 6% வளர்ச்சிபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய உள்நாட்டு நுகர்வு, வரும் 2019–20–ஆம் ஆண்டில் 25 மில்லியன் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காகித அட்டை சந்தையானது, காகித தொழிலில் வேகமாக வளர்ச்சி பெறும் ஒரு பிரிவாகும். இதில் பின்புறம் பழுப்பு நிறம் கொண்ட காகித அட்டை 45 சதவீதமும், பின்புறம் வெள்ளை நிறம் கொண்ட காகித அட்டை, மடிக்கக் கூடிய பெட்டிகள், சுத்தம் செய்யப்பட்ட திட சல்பேட் அட்டை மற்றும் சிறப்பு காகித அட்டைகள் மீதமுள்ள 55 சதவீதமும் ஆகும். இந்த மடிப்பு காகித அட்டையின் தேவையானது, ஆண்டு ஒன்றுக்கு 10–12% என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலவச வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் காகிதம் மற்றும் பேக்கேஜிங் அட்டையின் இறக்குமதி வரி தொடர்ந்து பூஜ்யமாக உள்ளது. மேலும் மூலப்பொருள்களின் பற்றாக்குறை, மரக்கூழின் விலையேற்றம், உபயோகப் படுத்திய காகிதத்தினை சேமித்து மறு சுழற்சிக்கு அனுப்ப தேவையான அமைப்புகள் இல்லாமை, இந்திய காகிதத் துறைக்கு பெரிய பின்னடைவிற்கு காரணமாகும்.

மேற்கூறிய சவால்களை சமாளிக்க இந்திய காகிதத்துறை மரக்கூழ் மரத்தோட்டங்களை அதிகரிப்பது, கழிவு காகித சேமிப்பினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், பூஜ்ய வரியின் கீழ் இறக்குமதி காகிதம் மற்றும் காகித அட்டையின் விலையுடன் போட்டியிட பயனுள்ள மற்றும் திறமையான செலவு கட்டுப்பாடு நடவடிக்கைகளை செயல்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

## *எதிர்கால வாய்ப்பு :*

இந்திய காகித தொழில் துறையானது, சிறு சிறு பிரிவுகளாக, **750** காகித ஆலைகளுடன், பல்வேறு உற்பத்தி திறனுடன் நாடெங்கும் பரவியுள்ளது. அவற்றில் **50** ஆலைகள் மட்டுமே ஆண்டொன்றுக்கு **50,000** மெ.டன்னுக்கு மேலான உற்பத்தி திறன் கொண்டவை. இவற்றின் சராசரி உற்பத்தி திறன் **80-90%** ஆகும்.

எழுது மற்றும் அச்சு காகிதப்பிரிவில், உள்நாட்டு காகிதத் துறையானது, கல்வி மற்றும் நிறுவனங்களின் தேவையால் சற்று வளர்ச்சி கண்டுள்ளது. இதற்கு உயரும் என எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதற்கு உதவியுள்ளது. இந்திய சராசரி நுகர்வு என்பது நபர் ஒருவருக்கு **13** கிலோ என்ற அளவிலேயே இருக்கின்றது. கடந்த **2018–19** ஆண்டு சற்று முன்னேற்றமடைந்த தேவையானது தொடர்ந்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அதிகரித்து வரும் கல்வி அறிவும் மற்றும் கல்வி நிறுவனங்களில் அதிகரித்து வரும் சேர்க்கையும் இந்தியாவில் காகிதத்தின் தேவைகள் அதிகரிப்பதற்கு குறிப்பிடத்தக்க காரணங்களாகும். உலக அளவில் காகித பயன்பாடு என்பது எதிர்மறையான தேங்கி நிற்கும் வளர்ச்சியாக உள்ளபோது, இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக இந்த வளர்ச்சி மிகவும் வலிமையாக உள்ளது. அதிகரித்து வரும் தனி நபர் வருமானம் மற்றும் வளர்ந்து வரும் நகர்ப்புறங்களினாலும் சராசரி காகித நுகர்வு நாட்டில் மெதுவாக முன்னேற்றமடைந்து, அதன் விளைவாக எழுது மற்றும் அச்சுதாள்கள் போன்ற நுகர்வோர் விரும்பும் காகிதங்களுக்கு தேவை அதிகரித்து வருகின்றது. முடிவு பயனாக, பாடப்புத்தகங்கள் தயாரிப்பு, மாணவர் நோட்டு புத்தகங்கள் தயாரிப்பு நகலெடுக்கும் காகிதம் மற்றும் மையச்சுப்பொறிக்கு தேவையான காகிதங்களாக மாறுகிறது.

பொதிகட்டும் காகித அட்டை பிரிவில், வளர்ந்து வரும் மின் வணிகம் போக்கால், விநியோகம் செய்வதற்கு தேவைப்படும் பொதிகட்டும் காகித அட்டையின் உற்பத்தி இடைவெளியை நிரப்பும். மேலும் ஒரு முறை மட்டும் உபயோகப்படுத்தும் நெகிழியின் மீது விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக, உணவு விநியோகம்

செய்பவர்கள் இந்த காகித அட்டையை பயன்படுத்த தொடங்கி இருப்பதால், இந்தப் பிரிவில் மிக அதிகமான தேவையை ஏற்படுத்தி உள்ளது. தொடர்ந்து ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி, காகித அட்டையின் தேவையை வரும் மாதங்களில் மெதுவாக முன்னேற்றும்.

வளர்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக, உங்களது நிறுவனம், இரண்டாவது அலகின் ஆலை விரிவாக்கத்திட்டத்தின் மூலம் 1,65,000 மெ.டன் காகிதத்தை ஆண்டொன்றிற்கு உற்பத்தி செய்யும் திறனுடன் ஒருபுதிய நவீன காகித இயந்திரம் நிறுவுதல், நாளொன்றுக்கு 400 டன் திறன் கொண்ட மரக்கூழ் ஆலை அமைத்தல், மின் உற்பத்தியை அதிகரித்தல், புதிய மீட்புக் கொதிகலன் அமைத்தல் போன்ற நடவடிக்கையினை எடுக்க இருக்கின்றது. இதற்கான திட்டமதிப்பு ரூ. 2,520 கோடி ஆகும்.

இந்த விரிவாக்கத்திட்டங்களை நிறைவேற்றுதல் மூலம், உங்கள் நிறுவனத்தின் மொத்த காகித மற்றும் காகித அட்டையின் உற்பத்தித் திறன் அலகு 1 மற்றும் அலகு 2 ஆகிய இரண்டையும் சேர்த்து ஆண்டொன்றுக்கு 6,00,000 மெ.டன்னிலிருந்து 7,65,000 மெ.டன்னாக அதிகரிக்கும்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு :

உங்கள் நிறுவனம், உலகிலுள்ள 35 பெரிய மற்றும் அதிமுக்கியமான மரக்கூழ் மற்றும் காகிதம் உற்பத்தியாளராக WWF சுற்றுச்சூழல் காகித நிறுவன அட்டவணை 2017ல் இடம் பெற்றுள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

உங்கள் நிறுவனம், சுற்றுச்சூழல் முன்னேற்றத்தை ஒரு தலையாய செயலாக கருதுகிறது. தண்ணீர் நுகர்வை கட்டுப்படுத்த தொடர்ச்சியான ஆய்வுகளும் மற்றும் கழிவு நீரின் தரமும் முன்னேற்ற மடைந்துள்ளது. மாசு கட்டுப்பாட்டு நெறிகளுக்கு உட்பட்டும், மத்திய சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆணையத்தின் ஒழுங்குமுறை விதிகளை கண்டிப்பாக பின்பற்றியும் வருகின்றது.

மேலும் உங்கள் நிறுவனம், தரமான பொருட்களையே வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் விநியோகித்தல் என்பதில் சமகால தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, ஒட்டுமொத்த உற்பத்தி திறன், மற்றும் சுத்தமான சுற்றுச் சூழலை உருவாக்க முனைப்புடன் உள்ளது.

இந்த ஆண்டில் உங்கள் நிறுவனம் 7,37,978 மெ.டன். துகள் நீக்கம் செய்யப்பட்ட கரும்புச்சக்கையை மூலப் பொருளாக பயன்படுத்தி, காகிதம் உற்பத்தி செய்தவகையில் 6.1 இலட்சம் டன் அளவுள்ள மரங்கள் வெட்டப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும் 2018–19– ஆம் ஆண்டு 94,166 மெ.டன் மை நீக்கிய கூழினை பயன்படுத்தியதன் காரணமாக 4.1 லட்சம் டன் கூழ் மரம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

53,403 மெ.டன் சுண்ணாம்பு சேறு சிமெண்ட் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டதனால், 61,132 மெ.டன் சுண்ணாம்பு கல் வெட்டி எடுக்கப்படுவது பாதுகாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நீர்ப்பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் காகித உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் தண்ணீர் ஒருடன் காகித உற்பத்திக்கு 40கி.லிட்டர் என்ற நிலையிலிருந்து 32 கி.லிட்டர் ஆக குறைந்துள்ளது. இது இந்திய ஒருங்கிணைந்த மரக்கூழ் மற்றும் காகித துறையில் மிகக் குறைந்த அளவு ஆகும். மேலும் நீரின் பயன்பாட்டை எல்லா நிலைகளிலும் முடிந்த அளவு கட்டுப்படுத்த தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தில், உங்கள் நிறுவனம் அண்ணா பல்கலைக் கழகத்தின் சேவையை பயன்படுத்தி சாத்தியமுள்ள பகுதிகளை கண்டறிந்து வருகின்றது. இதன்படி, ஒவ்வொன்றும் 5000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மூன்று மழைநீர் சேகரிப்பு குழிகளை தனது குடியிருப்பு பகுதியிலும், சுமார் 30,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட ஒரு நீர்த்தேக்க தொட்டியினை தனது ஆலை வளாகத்திலும் அமைத்துள்ளது.

உங்கள் நிறுவனம், 435 லட்சம் அலகு பசுமை மின்சாரத்தை தனது இரண்டு காற்றாலை பண்ணைமூலம் உற்பத்தி செய்துள்ளது.

உங்கள் நிறுவனம், ஆலையில் ஏற்படுத்தியுள்ள, தாவர பெருக்கம் மற்றும் ஆராய்ச்சி மையம் மூலமாக, 4 கோடி நடவு கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விளை நிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

உங்கள் நிறுவனம் கடந்த 2004–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய இரண்டு திட்டங்கள் மூலம் வறண்ட மற்றும் வளமற்ற நிலங்களை மேம்படுத்தி அதில் பசுமை போர்வையை ஏற்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தி அதிகப்படியான பலனை அவர்கள் பெற வழி செய்துள்ளது. அவை பண்ணைக் காடுகள் திட்டம், மற்றும் கட்டுப்பட்ட பண்ணைத்திட்டம் ஆகும். இவை பொருளாதார ரீதியாகவும், சமுதாயத்திற்கு ஏற்றதாகவும், மக்களை மையப்படுத்தியும் அமைந்துள்ளது. இது நாள் வரை உங்கள் நிறுவனம், 1,46,436 ஏக்கர் நிலத்தில் சுமார் 15,875 ஏக்கரில் கட்டுப்பட்ட பண்ணைத் திட்டமும் சுமார் 1,30,561 ஏக்கரில் பண்ணைக்காடுத் திட்டமும் அமைத்து அதில் 27,596 விவசாயிகளை ஈடுபடுத்தி உள்ளது.

## *நிறுவனத்தின் சமுதாயப் பொறுப்பு :*

உங்கள் நிறுவனம், ஒரு சமுதாயப் பொறுப்பு மிக்க நிறுவனமாக தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு, உங்கள் நிறுவனம் பல்வேறு சமுதாய வளர்ச்சி திட்டங்களாக கல்வி மேம்பாடு, சுகாதார அக்கறை, சமுதாய பொருளாதார வளர்ச்சி, சுற்றுச் சூழல் பேணல், கலாச்சாரம் மற்றும் மரபு காத்தல் போன்ற முக்கிய துறைகளில் ஆலை வளாகம் சுற்றியுள்ள இடங்களில் பல்வேறு சமுதாயப் பணிகளை செயல்படுத்தியுள்ளது. உங்கள் நிறுவனம், சமுதாயப் பொறுப்பு செலவினங்களுக்காக 2018–19ஆம் ஆண்டிற்காக ரூபாய் 4.05 கோடி செலவு செய்துள்ளது. முக்கியமாக திறன் மேம்பாட்டு திட்டங்கள், மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், குடி தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் போன்றவை மூலமாக சமுதாய பொருளாதார நிலையை மேம்படுத்த முனைப்புடன் செயல்படுகின்றது.

## *நன்றி :*

மத்திய, மாநில அரசுகள் மற்றும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியோர் அளித்த மதிப்பு மிகுந்த ஆதரவு மற்றும் உதவிக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை இத்தருணத்தில் பதிவு செய்கிறேன்.

இயக்குனர் குழுமத்திலுள்ள என் சக இயக்குனர்கள், எனக்களித்த மதிப்பு மிக்க ஆலோசனை மற்றும் உதவிக்கு என் நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவனத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவரும் மேற்கொண்ட முயற்சிகளுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகளை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பங்குதாரர்கள் மற்றும் ஏனைய முதலீட்டாளர்கள் அனைவரும் தொடர்ந்து நல்கி வரும் ஊக்கத்திற்கும், ஆதரவிற்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொதுக்குழுக் கூட்டத்தில் தாங்கள் அனைவரும் தங்களின் பொன்னான நேரத்தை ஒதுக்கிக் கலந்து கொண்டமைக்கு மீண்டும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!!